செய்தி வெளியீடு எண். 31-2016 நாள்: 17.10.2016

# விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள இரண்டு பணிமனை உதவியாளர் பணியிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

******

திண்டிவனம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இரண்டு பணிமனை உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. 1.பொருத்துனர் (Fitter) மற்றும் கம்மியர் குளிர்பதனம், 2. தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் (MR & AC) தலா ஒரு பணியிடம் நிரப்பப்பட உள்ளது.

1. பொருத்துனர் பணிமனை உதவியாளர் பணிக்கு பொதுப்பிரிவு முன்னுரிமை பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கல்வி தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் NTC (அ) NAC.

2. குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல் (MR & AC) பணிமனை உதவியாளர் பணிடத்திற்கு தாழ்த்தப்பட்ட அருந்ததி பெண்கள் விதவையாக இருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகுதி 10-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் NTC (அ) NAC பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு அனைத்து பிரிவிற்கும் குறைந்தது 18 முடிந்திருக்க வேண்டும். அதிக பட்ச வயது OC - 30 வயதும் BC, MBC - 32 வயதும் SC, SA, ST - 35 வயதிற்குள் இருக்க வேண்டும் ஊதிய விகிதம் 5200 – 20200+ GP1900 ஆகும். விண்ணப்பங்கள் முதல்வர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், சந்தைமேடு, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் என்ற முகவரிக்கு 31.10.2016-க்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.